## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 54/2016

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மோகன் | மதம் | : |
| த/பெ | : ராதாகிருஷ்ணன் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

21.09.2024

<u>பி.வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு சொத்து ஆதியில் சுப்பிரமணிய நாயுடுக்கு சொந்தமானது என்றால் சரிதான். சுப்பிரமணிய நாயுடு அவரது மனைவி பாப்பம்மாளுக்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் என்றால் 6 பேர். தாவா சொத்தின் பட்டா பாப்பம்மாள், வாதி பாபு நாயுடு, நாகராஜ், முனுசாமி நாயுடு பெயரில் இருந்தது என்றால் சரிதான். கூட்டு பட்டாவில் மொத்தம் எத்தனை செண்ட் நிலம் இருந்தது என்றால் 62 செண்ட் ஆகும். மேற்படி சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.23/3A2 ஆகும்.

2. மொத்தம் 62 செண்ட் நிலத்தில் 21 செண்ட் மட்டும் பாப்பம்மாள், வாதி பாபு நாயுடு, வேணுகோபால், நாகராஜ் ஆகியோருக்கு பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி அனைவரும் சேர்ந்துதான் குடும்ப கஷ்டத்திற்கு என்னிடம் பணம் கேட்டதாக நான் எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 8ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பணத்தை கடனாக கேட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த பணத்தை கடனாகதான் கேட்டார்கள் என்றாலும் சொத்தை என் தகப்பனாரின் பெயரில் அடமானம் கேட்டார்கள் என்றாலும் சரியல்ல.

3. மேற்படி 06.03.2002 ம் தேதியிட்ட பி.வா.சா.ஆ 2 கிரைய ஆவணத்தில் வாதியின் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. அப்போது அவர் வெளிநாட்டில் இருந்தார். வெளிநாட்டில் இருந்தாரா அல்லது விமானப்படையில் வேலையில் இருந்தரா என்றால் விமானப்படையில் வேலையில் இருந்தார். 06.03.2002 ல் நான் இளவரா என்றால் நான் 1984 ல் 6 ம் மாதம் பிறந்தேன். நான் ஏற்கனவே குறுக்கு விசாரணையில் இளவர் என ஒப்புக்கொண்டேன் என்றால் இல்லை.

4. நான் ஏற்கனவே குறுக்கு விசாரணையில் மேற்படி 06.03.2002 ஆவணம் குறித்து எந்த விவரமும் தெரியாது என சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக ஏற்கனவே கூறிய விவரங்களை மாற்றி மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் , வாதி பாபு நாயுடு, பிரதிவாதிகள் வேணுகோபால், நாகராஜ், பாப்பம்மாள் ஆகியோர் தாவா சொத்தை கடனுக்காக அடமானம் எழுதி கொடுக்க சென்றார்கள் என்றாலும் என் அப்பா மோசடியாக கிரைய ஆவணம் பதிந்து கொண்டார்கள் என்றாலும் சரியல்ல. எனவே 06.03.2002 ம் தேதியிட்ட ஆவண எண்.464/2002 சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)